Registered with the Registrar
of Newspapers for India
under No. 10410

Registered No. PY/44/2021-23

சத்யமேவ ஜயதே

# புதுச்சேரி மாநில அரசிதழ்

# La Gazette de L' État de Poudouchéry

# The Gazette of Puducherry

**PART - I**

| சிறப்பு வெளியீடு | EXTRAORDINAIRE | EXTRAORDINARY |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற வெளியீடு | Publiée par Autorité | Published by Authority |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| எண் | | புதுச்சேரி | வெள்ளிக்கிழமை | 2022 ஸ்ரீ | மார்ச் மீ | 18 உ |
| No. | 37 | Poudouchéry | Vendredi | 18 | Mars | 2022 (27 Phalguna 1943) |
| No. | | Puducherry | Friday | 18th | March | 2022 |


**காரைக்கால் நகர அமைப்புக் குழுமம், காரைக்கால்**

*எண் 327/KPA/Master Plan/2021/277.*

பொது அறிவிப்பு

புதுச்சேரி அரசு, தலைமை செயலகம் (வீட்டு வசதி) அரசாணை எண் 05/2016. தேதி 11-03-2016 மற்றும் புதுச்சேரி நகர மற்றும் கிராம அமைப்பு சட்டம், 1969-ன் பிரிவு (20) மற்றும் (23)-ன் படி காரைக்கால் திட்ட முழு எல்லைக்கான தற்போதைய நில பயன்பாடு வரைபடம் மற்றும் பதிவேடு, 2021 மற்றும் விரிவான வளர்ச்சித் திட்ட (மாஸ்டர் பிளான்) தயாரிப்பு பணிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆகையால், காரைக்கால் திட்ட முழு எல்லைப் பகுதியான 160 சதுர கிலோ மீட்டருக்கு தற்போதைய நில பயன்பாடு வரைபடம் மற்றும் பதிவேடு 2021. காரைக்கால் நகரமைப்புக் குழுமத்தால் தயாரிக்கப்பட்டு, பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணைகள்/பரிந்துரைகள் பெறவேண்டி, புதுச்சேரி நகர மற்றும் கிராம அமைப்புச்சட்டம், 1969-ன் பிரிவு 18(1)-ன் படியும், புதுச்சேரி நகர மற்றும் கிராம அமைப்பு விதிகள் 1974-ன் விதி (41)-ன் படியும் ஒரு பொது அறிவிப்பு எண் *327/KPA/Master Plan/2021/2221*, தேதி 12-10-2021 புதுச்சேரி மாநில அரசிதழ்

சிறப்பு வெளியீடு எண் 261, தேதி 21-10-2021-லும் மற்றும் உள்ளூர் செய்தித்தாள்களான 16-10-2021 தேதியிட்ட தி இந்து ஆங்கில நாளிதழிலும், 16-10-2021 தேதியிட்ட தினத்தந்தி நாளிதழிலும், காரைக்கால் நகர அமைப்பு குழுமத்தால் வெளியிடப்பட்டது.

இந்த தற்போதைய நில பயன்பாடு வரைபடம் மற்றும் பதிவேடு 2021, அலுவலக வேலை நேரங்களில் பொது மக்கள் பார்வைக்காக காரைக்கால் நகர அமைப்பு குழும அலுவலகத்திலும் மற்றும் இணையதள முகவரிகளான *https://tcpd.py.gov.in* மற்றும் *https://karaikal.gov.in.*-லும் வெளியிடப்பட்டது.

இது சம்பந்தமாக, பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபணைகளை 17-12-2021 மற்றும் 30-12-2021 ஆகிய தேதிகளில் தலைமை நகர அமைப்பாளர் கேட்டறிந்து, தலைமை நகர அமைப்பாளரின் அறிக்கை/பரிந்துரைகளின் அடிப்படையில் தற்போதைய நில பயன்பாடு வரைபடம் மற்றும் பதிவேடு, 2021 மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

எனவே, புதுச்சேரி நகர மற்றும் கிராம அமைப்புச் சட்டம், 1969-ன் பிரிவு 18(5)-படி இந்த பொது அறிவிப்பு வெளியிடுவது என்னவென்றால், காரைக்கால் திட்ட முழு எல்லைக்கான தற்போதைய நிலபயன்பாடு வரைபடம் மற்றும் பதிவேடு, 2021 காரைக்கால் நகரமைப்பு குழுமத்தால் முறையாக தயாரிக்கப்பட்டு இந்த அறிவிப்பு புதுச்சேரி மாநில அரசிதழில் வெளியான நாள் முதல் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மேலும், ஏற்றுக்கொள்ளப்பட்ட தற்போதைய நில பயன்பாடு வரைபடம் மற்றும் பதிவேடு 2021 பொதுமக்கள் பார்வைக்காக காரைக்கால் நகர அமைப்பு குழுமம் அலுவலகத்திலும் மற்றும் இணைய தள முகவரியான *https://tcpd.py.gov.in.*-லும் வைக்கப்பட்டுள்ளது.

*காரைக்கால், 2022 ஆம் மார்ச் மீ 18 உ.*

**க. பிரேம் ஆனந்த்,**
உறுப்பினர்-செயலர்.

---

**KARAIKAL PLANNING AUTHORITY, KARAIKAL**

*No. 327/KPA/Master Plan/2021/277.*

*Karaikal, the 18th March 2022.*

PUBLIC NOTICE

Whereas, in the G.O. Ms. No. 05/2016-Hg, dated 11-03-2016 of the Chief Secretariat (Housing), Government of Puducherry, sanction has been accorded under section (20) and (23) of Puducherry Town and Country Planning Act, 1969 to prepare the Existing Land Use Map and Register and Draft Comprehensive Development Plan for the Karaikal Planning Area.

And whereas, an Existing Land Use Map and Register, 2021 for the entire Karaikal Planning Area to an extent of 160 sq.km. have been prepared by the Karaikal Planning Authority, Karaikal.

And whereas, a Notice calling objections from the public was issued *vide* No. 327/KPA/CDP/2021/2221, dated 12-10-2021 of the Karaikal Planning Authority which has also been published in the Official Gazette *vide* Extraordinary Gazette No. 261, dated 21-10-2021 and also in the local newspapers *viz.* The Hindu dated 16-10-2021 and Dinamalar dated 16-10-2021 in accordance with the provision of

section 18 (1) of the Puducherry Town and Country Planning Act, 1969, read with rule 41 of the Puducherry Town and Country Planning Rules, 1974. Whereas, a copy of the said Existing Land Use Maps and Registers, 2021 was made available for inspection by the public during office hours in the Office of the Karaikal Planning Authority and also made available in the official *website https://tcpd.py.gov.in* and *https://karaikal.gov.in.*

And whereas, objections received from the public have been heard by the Chief Town Planner on 17-12-2021 and 30-12-2021 and based on the report/ suggestions of the Chief Town Planner, the Existing Land Use Map and Registers, 2021 has since been modified.

Now, therefore, a Public Notice is hereby given pursuant to sub-section (5) of section 18 of the Puducherry Town and Country Planning Act, 1969 that the Existing Land Use Map and Register, 2021 for the Karaikal Planning Area have duly been prepared and adapted by the Karaikal Planning Authority from the date of publication of this Notice in the Official Gazette of Government of Puducherry. The adapted Existing Land Use Map and Register, 2021 are available for inspection during office hours in the Office of the Karaikal Planning Authority and also in the official *website https://tcpd.py.gov.in.*

**K. PREMANAND,**
Member-Secretary.

online publication at **"https://styandptg.py.gov.in"**
*Published by* the Director, Government Press, Puducherry.